**IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM**

O.S. No. 119/2016

Deposition of PW2 witness of Plaintiff/Petitioner/ Defendant /Respondent Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X 1872 on the 23rd day of August 2023.

| | |
|---|---|
| Name : சௌந்திரம் | Caste: |
| Father's Name: பெருமாள் நாயுடு | Calling: |
| Village : | Religion: |
| Taluk : | Age: |
| Date : | |

**23-08-2023**

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

மூன்று தலைமுறையாக நாங்கள் குள்ளப்ப நாய்க்கனூரில் குடியிருந்து வருகிறோம். தாவா சொத்து ஆதியில் ஒரு பத்துமலை என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் பத்துமலை என்பவரிடம் கொண்டம்மாள் என்பவர் ஒரு குத்தகை ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொண்டார் என்று நான் கூறியுள்ளேன் என்றால் ஆமாம். அந்த விவரத்தை கொண்டம்மாளும், அவருடைய பேரன்களும் என்னிடம் சொன்னார்கள் என்றால் ஆமாம். இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து எனக்கு சம்மன் ஏதும் வரவில்லை. கொண்டம்மாள் மற்றும் அவரது பேரன்கள் கேட்டுக்கொண்டதற்காக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ஆமாம். நான் 1948 ம் வருடம் பிறந்தேன். 1961 ம் வருடம் கொண்டம்மாள்

என்பவர் பத்துமலை என்பவருடன் ஒரு குத்தகை ஒப்பந்தம் போட்டு தாவா சொத்தில் வந்தார் என்றால், எனக்கு 1982ம் வருடம் குத்தகை போட்ட விவரம் தான் தெரியும். 1982ம் வருடம் கொண்டம்மாளும், ஒரு பன்னீர்செல்வமும் குத்தகை ஒப்பந்தம் போட்டுக்கொண்டார்கள் என்றால் ஆமாம். பன்னீர்செல்வம் என்பவர் பத்துமலை என்பவரின் மகன் என்றால் ஆமாம். கொண்டம்மாள் என்பவர் நில உரிமையாளர் பத்துமலை என்றும், அவருக்கு பின்னிட்டு அவருடைய மகன் பன்னீர்செல்வத்திடம் குத்தகை ஒப்பந்தம் போட்டுக் கொண்டதாக என்னிடம் சொன்னார் என்றால் ஆமாம். வா.த.சா.ஆ–A1 குத்தகை ஒப்பந்தத்தில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை. கொண்டம்மாள் வருடா வருடம் குத்தகை தொகை செலுத்தி வந்தார் என்று சொன்னால் பேசிக்கொண்டார்கள். நான் கவனிக்கவில்லை. அந்த பேசிக் கொண்ட விவரம் எனக்கு தெரியும். 1985ம் வருடம் குத்தகை சம்மந்தமாக அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டு கொண்டம்மாள் நீதிமன்றத்திற்கு சென்றுவிட்டார். அந்த விவரங்கள் கொண்டம்மாள் என்னிடம் சொல்லியுள்ளார். நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு முன்னர் அந்த விவரங்களை கொண்டம்மாள் என்னிடம் சொன்னார். வா.த.சா.ஆ–A12 ன் படி பஞ்சாயத்து கூட்டப்பட்டது என்றால் ஆமாம். வா.த.சா.ஆ–A12 ல் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் ஆமாம். பஞ்சாயத்தில் இருந்தேன். அந்த பஞ்சாயத்தில் பன்னீர்செல்வம், கொண்டம்மாளிடம் இருந்து பணம் பெற்றுக்கொண்டார் என்று சொன்னால் பணம் வாங்கவில்லை. பன்னீர்செல்வம் நிலத்தின் உரிமையாளர் என்பதால் வா.த.சா.ஆ–A12 பஞ்சாயத்து முச்சலிக்கா எழுதப்பட்டது என்று சொன்னால் குத்தகை சம்மந்தமாக பிரச்சனை வந்ததால் பஞ்சாயத்து நடந்தது. பஞ்சாயத்து படி பன்னீர்செல்வம் நடக்கவில்லை என்று, கொண்டம்மாளை நீதிமன்றத்தில் வழக்கு போட்டு பார்த்து கொள்ளுமாறு கூறினோம். அதன் பின்னிட்டு

கொண்டம்மாள் 1985ம் வருடம் சேலம் நீதிமன்றத்தில் வழக்கு போட்டார் என்றால் ஆமாம். வா.த.சா.ஆ–A8 மற்றும் வா.த.சா.ஆ–A9 மற்றும் வா.த.சா.ஆ–A13 உயில்கள் கொண்டம்மாள் உயிரோடு இருப்பதால் அவர் எழுதி வைத்த உயில்கள் நடைமுறைக்கு வரவில்லை என்றால் ஆமாம். நான் உயில்களில் சாட்சி கையெழுத்து போடும் போது கொண்டம்மாள் பெயரில் சொத்துக்கள் இருந்ததா என்று எனக்கு தெரியாது. வாதி சொல்லி வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. வாதியினுடைய பேரனும், நானும் நண்பர்கள் என்பதால் வாதி கேட்டுக்கொண்டதற்காக அவருக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/– A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.